பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

20 12 2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, அஸ்ஸாம் மாநிலத்தில் இன்று 15 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

2. குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று ஹைதராபாதில் அரசு பணியாளர் தேர்வாணைய தலைவர்களின் தேசிய மாநாட்டில் உரையாற்றுகிறார்.

3. இந்தியா - நெதர்லாந்து நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்த கூட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் குழு அமைக்க இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

4. பங்களாதேஷில் அண்மையில் நிகழ்ந்த வன்முறைகள், வரும் பொதுத்தேர்தலை சீர்குலைக்க நடத்தப்பட்டுள்ள சதி என்று பங்களாதேஷ் தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று அரையிறுதியில் சீன இணையை எதிர்கொள்கிறது

>>>>>>>><<<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அஸ்ஸாம் மாநிலத்தில் இன்று 15 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

மேற்குவங்க பயணத்தை முடித்துக் கொண்டு இன்று பிற்பகல் இரண்டு நாள் பயணமாக அஸ்ஸாம் செல்லவுள்ள அவர், அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

தலைநகர் குவஹாத்தியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், அஸ்ஸாம் மாநிலத்தின் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் கலைநயத்துடன் கட்டப்பட்டுள்ள புதிய முனையத்தை அவர் திறந்து வைக்கிறார்.

இந்த முனையம், ஆண்டுக்கு ஒரு கோடியே 30 லட்சம் பயணிகளை கையாளும் திறன் கொண்டதாகும்.

முன்னதாக, முன்னாள் முதலமைச்சர் மறைந்த கோபிநாத் பர்தலோய்-ன் உருவச் சிலையை பிரதமர் திறந்து வைத்து உரையாற்றவுள்ளார்.

நாளை, பிரம்மபுத்திரா நதியில் கப்பலில் பயணம் செய்தவாறு, தேர்வுக்கு தயாராகும் பள்ளி மாணவர்களுடன் அவர் கலந்துரையாடவுள்ளார்.

தனது பயணத்தின் நிறைவாக, நாம்ரூப் பகுதியில் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான அமோனியா உர தொழிற்சாலைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று ஹைதராபாதில் அரசு பணியாளர் தேர்வாணைய தலைவர்களின் தேசிய மாநாட்டில் உரையாற்றுகிறார்.

தெலங்கானா மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள, இன்று ஹைதராபாத் செல்லும் அவர், நாளை நந்திகாமாவில் உலக தியான தின கொண்டாட்டத்தில் பங்கேற்கிறார்.

அதனைத் தொடர்ந்து, மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூர் செல்லவுள்ள அவர், மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்கிறார்.

>>>>>>>><<<<<<<<

இந்தியா - நெதர்லாந்து நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்த கூட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் குழு அமைக்க இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

இதற்கு வகை செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருநாடுகளின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகங்கள் கையெழுத்திட்டுள்ளன.

புதுதில்லி வந்துள்ள நெதர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. David Van Weel நேற்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசிய பின்னர், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இருதரப்பு வர்த்தக உறவுகளை ஆய்வு செய்யவும், இருநாடுகளுக்கு இடையிலான முதலீடுகளை மேலும் அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுநாடுகளுக்கும் பொதுவான ஆர்வமுள்ள துறைகளில் புதிய ஒத்துழைப்பை கண்டறியவும் இந்த முதலீட்டுக் குழு உதவும் என்று மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டை உறுதியாக பதிவு செய்ததற்காக அவர்களுக்கு வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நேற்று புதுதில்லியில் தம்மை சந்தித்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இதனை தெரிவித்த அவர், இத்தகைய பயணங்கள் சர்வதேச அளவில் இந்தியாவின் நாடாளுமன்ற செயல்பாடுகளை வலுப்படுத்த உதவும் என்று அவர் கூறினார்.

இந்தக் குழுவினர் உலக அரங்கில் தங்களின் அனுபவங்கள் மற்றும் பங்களிப்புகள் குறித்து அமைச்சருடன் பகிர்ந்து கொண்டனர்.

>>>>>>>><<<<<<<<

தெலங்கானா மாநிலத்தில் விவசாயிகள் யூரியா உரத்தை எளிதாக பெறுவதற்காக கைபேசி செயலி வழி முன்பதிவு முறையை அம்மாநில வேளாண்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

மாநிலத்தில் உர விநியோகத்தை சீரமைக்கவும், விற்பனையை வெளிப்படையாக்கவும் தொழில்நுட்ப ரீதியிலான இம்முயற்சியை அம்மாநில அரசு மேற்கொண்டுள்ளது.

fertilizer booking app என்ற ஆன்ட்ராய்டு செயலி இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயலியில் விவசாயிகள் தங்களுக்கு தேவையான யூரியா உர மூட்டைகளை முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றும், அவ்வாறு முன்பதிவு

செய்யப்பட்ட மூட்டைகள் 24 மணி நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>>>>><<<<<<<<<

பங்களாதேஷில் அண்மையில் நிகழ்ந்த வன்முறைகள், வரும் பொதுத்தேர்தலை சீர்குலைக்க நடத்தப்பட்டுள்ள சதி என்று பங்களாதேஷ் தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அந்நாட்டில் கடந்த ஜூலை மாதம் அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில், முன்னணியில் செயல்பட்ட மாணவர்கள் சங்கத் தலைவர் Sharif Osman Hadi உயிரிழந்த் அடுத்து, நேற்று முன்தினம் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன.

செய்தி நிறுவனங்கள் மீதும், இந்திய துணைத் தூதரக அலுவலகம் மற்றும் டாக்காவில் உள்ள புகழ்பெற்ற சாயாநாட் கலாச்சார மையத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டன.

இந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டின் முக்கிய அரசியல் கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திரு. மிர்ஸா பக்ருல் இஸ்லாம், ஜனநாயக முறைப்படி அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம்

தேர்தல் நடைபெறுவதை தடுக்க ஒரு கும்பல் திட்டமிட்டு செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்கு எதிராக அனைத்து தேசபக்தி சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கிடையே, திரு. முஹமது யூனூஸ் தலைமையிலான இடைக்கால அரசு, மக்கள் அமைதி காக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

சிரியாவில் ஐஎஸ் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது அமெரிக்க ராணுவம் மிகப் பெரிய அளவிலான வான்வெளி தாக்குதலை நடத்தியுள்ளது.

அந்நாட்டில் உள்ள அமெரிக்கப் படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலர் திரு. Pete Hegseth தெரிவித்துள்ளார்.

ஐஎஸ் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள், அவர்களின் உள்கட்டமைப்புகள் மற்றும் ஆயுதக் கிடங்குகளை குறிவைத்து அமெரிக்க போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அவர் கூறினார்.

இதில் ஜோர்டான் நாட்டு போர் விமானங்களும் பங்கேற்றதாக திரு. Pete Hegseth தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்தினால், விளைவுகள் மோசமாக இருக்கும் என்று எச்சரித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

மஹாராஷ்ட்ரா மாநிலம், நாக்பூரில் தொழிற்சாலை ஒன்றின் தண்ணீர் தொட்டி இடிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழந்தனர்.

இடிபாடுகளில் சிக்கி சம்பவ இடத்திலேயே 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 3 பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாகவும், மேலும் 9 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்து குறித்து வேதனை தெரிவித்துள்ள மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று அரையிறுதியில் சீனாவின் Liang Weikeng – Wang Chang இணையை எதிர்கொள்கிறது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், அரையிறுதிக்கு முன்னேறிய முதல் இந்திய ஆடவர் இரட்டையர் இணை என்ற பெருமையை இந்த இணை பெற்றுள்ளது.

>>>>>>>><<<<<<<<

இந்திய மகளிர் கால்பந்து லீக் போட்டிகள் இன்று கொல்கத்தாவில் தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் 8 முன்னணி மகளிர் கால்பந்து அணிகள் பங்கேற்கின்றன.

>>>>>>>><<<<<<<<

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி ட்வென்டி ட்வென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 30 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 231 ரன் எடுத்தது.

232 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்தது.

வருண் சக்கரவர்த்தி 4 விக்கெட்டுகளையும், ஜஸ்ப்ரீத் பும்ரா 2 விக்கெட்டுகளையும், ஹர்ஸ்தீப் சிங், ஹர்டிக் பாண்டியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

>>>>>>>><<<<<<<<<

ஜம்மு காஷ்மீர் வரலாற்றில் முதன் முறையாக சர்வதேச இந்திய பாணி மல்யுத்த திருவிழா, இன்று நடைபெறவுள்ளது.

ஜம்முவில் உள்ள புகழ்பெற்ற மௌலானா ஆசாத் மைதானத்தில் நடைபெறும் மல்யுத்த போட்டிகளில் இந்தியா மட்டுமல்லாது ஈரான், ரஷ்யா மற்றும் பல்வேறு ஆசிய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட தலைசிறந்த மல்யுத்த வீரர்கள் பங்கேற்கின்றனர்.

85 கிலோ எடைக்கு மேல் உள்ள வீரர்களுக்காக பிரத்யேகமாக நடைபெறும் இப்போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் பாரம்பரியமான கதாயுதம் வழங்கி கௌரவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மல்யுத்தம் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளை மீட்டெடுத்து, இளைஞர்களை போதைப் பழக்கத்திலிருந்து மீட்டெடுக்க, இதுபொன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>>>>END<<<<<<<<<